Australian Red Cross

## வீட்டு-வசதிக் கட்டண உதவித்தொகைத் திட்டம்

**விக்டோரிய மாநிலத்தில் அடைக்கலம் நாடிக்கொண்டிருப்பவர்களுக்கான நிதியுதவி**

### இந்தத் திட்டம் யாருக்காக?

விண்ணப்பதாரர்கள் பின் வரும் அனைத்தையும் பூர்த்தி செய்தாகவேண்டும்:

- விக்டோரிய மாநிலத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்
- வீட்டுவசதிக் கட்டணங்களுக்கான மற்ற தள்ளுபடிகள் எதையும் பெற்றுக்கொண்டிருக்கக் கூடாது
- அடைக்கலம் நாடிக்கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்
- வருமானம் இல்லாதவராக, அல்லது மிகவும் குறைந்த வருமானம், சேமிப்பு உள்ளவராக, அல்லது மிகவும் குறைந்த சமூக உதவிகளைப் பெற்றுவருபவராக இருக்கவேண்டும்.

### அளிக்கப்படும் உதவிகள் யாவை?

தண்ணீர், எரிவாயு, மின்சாரம் போன்ற செலுத்தப்படாமல் இருக்கும் வீட்டுவசதிக் கட்டணங்களின் ஒரு பகுதியைச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் வரையறுக்கப்பட்டப் பண உதவி.

விக்டோரிய மாநிலத்தில் அடைக்கலம் நாடிக்கொண்டிருப்பவர்களுக்குக் கிடைக்கும் மற்ற ஆதரவுதவிகளைப் பற்றிய தகவல்களையும் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்க இயலும்.

மேலதிகத் தகவல்களுக்காகவும், விண்ணப்பிப்பதற்காகவும் பின் வரும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்:

**redcross.org.au/utilitysupport**

உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால், 03 8327 73 70 எனும் இலக்கத்தில் நீங்கள் எம்மை அழைக்கலாம். மொழிபெயர்ப்பாளர் ஒருவரை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.